# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2023

| தரம் - 08 | வரலாறு | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் .....................................................................................

### பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. குளம், கால்வாய், தடாகம் என்பனவற்றுடன் தொடர்புடைய தொழிநுட்ப முறைகள்.
    1. நீரியல் தொழிநுட்பம் 2. உலோகத் தொழிநுட்பம்
    3. சமுத்திர தொழிநுட்பம் 4. களிமண் தொழிநுட்பம்

02. இந்தியாவில் இருந்து வந்த குழுக்கள் முதன்முதலில் இலங்கையில் குடியிருப்புக்களை நிறுவிய காலப்பகுதி
    1. கி.மு 4ம் நூற்றாண்டு 2. கி.மு 5ம் நூற்றாண்டு
    3. கி.மு 6ம் நூற்றாண்டு 4. கி.மு 8ம் நூற்றாண்டு

03. இலங்கையில் வருடத்தில் ஒரு பருவத்திற்கு மட்டும் மழவீழ்ச்சியைப் பெறும் பிரதேசம்
    1. ஈரவலயம் 2. உலர் வலயம்
    3. அரைகுறைவறள் வலயம் 4. தாழ்நில ஈரவலயம்

04. கிராமத் தலைவர்களின் வழிகாட்டல்களின் கீழ் உருவாக்கப்பட்ட குளங்கள்
    1. நடுத்தர அளவிலான குளங்கள் 2. பாரிய குளங்கள்
    3. சமுத்திரங்கள் 4. கிராமக் குளங்கள்

05. இலங்கையில் முதன்முதலில் குளங்களை அமைத்த மன்னனாக மகாவம்சத்தில் குறிப்பிடப்படுவன்
    1. பண்டுகாபயன் 2. தேவநம்பிய தீஸன்
    3. வலகம்பா 4. துட்டகைமுனு

06. தேவநம்பியதீஸ மன்னனால் அனுராதபுரத்தில் அமைக்கப்பட்ட குளம்
    1. அபயவாவி 2. ஜயவாவி
    3. திஸாவி 4. சோரபொரவாவி

07. இலங்கையில் முதன்முதலில் பாரியகுளங்களை அமைத்த மன்னனாகக் குறிப்பிடப்படுபவன்
    1. மகாசேனன் 2. வுசபன்
    3. தாதுசேனன் 4. 1ம் பராக்கிரமபாகு

kalvi.lk

08. 'மின்னேரியாத் தெய்வம்' எனப்போற்றப்படுகின்ற மன்னன்

1. தாதுசேனன் 2. வசபன்
3. மகாசேனன் 4. 1ம் விஜயபாகு

09. "இந்நாட்டில் மழையினால் பெறும் ஒருதுளி நீரையேனும் மனிதருக்குப் பயன்படாமல் கடலில் கலக்க விடமாட்டேன்" என்ற மகுட வாசகத்திற்கு இணங்கச் செயற்பட்ட மன்னன்

1. 1ம் விஜயபாகு 2. நிஸங்கமல்லன்
3. தாதுசேனன் 4. மகாபராக்கிரமபாகு

10. அனுராதபுரம், பொலநறுவை ஆகிய இரு இராசதானிகளையும் உள்ளடக்கிய பகுதி

1. இராசரட்டை 2. உருகுணுரட்டை
3. மலையரட்டை 4. தக்கின தேசம்

11. பொலநறுவை இராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாக அமைந்த படையெடுப்பு

1. முதலாம் இராஜராஜசோழனின் படையெடுப்பு
2. கலிங்கமாகனின் படையெடுப்பு
3. ஸ்ரீ மாற ஸ்ரீ வல்வமனின் படையெடுப்பு
4. முதலாம் இராஜேந்திர சோழனின் படையெடுப்பு

Education கல்வி

12. குளத்தில் மேலதிக நீரினை வெளியேற்றும் உறுப்பு

1. அலைதாங்கி 2. கலிங்கற்தொட்டி
3. மடைக் கதவு 4. வேளிவான்கதவு / சுருங்கை

13. எலகரக்கால்வாய் / ஆனிசாராக்கால்வாய் அமைத்த மன்னனாகக் குறிப்பிடப்படுபவன்

1. வசபன் 2. மகாசேனன் 3. தாதுசேனன் 4. 1ம் அக்கபோதி

14. "இலங்கையின் புராதன நீர்ப்பாசனம்" எனும் நூலை எழுதியவர்

1. இபன் பதூதா 2. ஆர். எஸ். புரோஹியர்
3. ஹியுங்சாங் 4. பாகியன்

15. மனிதர்களுடைய பல்வேறு தேவைகளுக்காக நீரைச் சேகரித்து வைத்துக் கொள்வதற்கு நிலத்தை அளந்து கொள்ளும் ஆக்கம்

1. சிறுகுளம் 2. பூங்கா
3. நீர்த்தேக்கம் 4. பொய்கை

16. இலங்கையில் முதன்முதலில் பூங்காவை அமைத்த மன்னனாகக் குறிப்பிடப்படுபவன்

1. குட்டகண்ணதிஸ்ஸன் 2. 1ம் காசியப்பன்
3. மூத்தசிவன் 4. வசபன்

17. புராதன காலப்பகுதியில் ஓடு, செங்கல் என்பவற்றை உற்பத்தி செய்தவர்கள்
   1. குயவர்கள்   2. முட்டாண்ட உற்பத்தியாளர்கள்
   3. சொல்லர்கள்   4. ஓட்டுத்தச்சர்கள்

18. அளவில் சிறிய தூபிகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட கட்டடம்
   1. சிலைமனை   2. தூபிமனை
   3. போதிமனை   4. வட்டதாகே

19. சீகிரிய ஓவியங்கள் எக்காலப்பகுதிக்குரியதாகக் கருதப்படுகின்றது.
   1. கி.பி 5ம் நூற்றாண்டு   2. கி.பி 4ம் நூற்றாண்டு
   3. கி.பி 3ம் நூற்றாண்டு   4. கி.பி 6ம் நூற்றாண்டு

20. பொலநறுவைக்காலச் சந்திரவட்டக்கல்லில் நீக்கப்பட்ட மிருக உருவம்
   1. மான்   2. சிங்கம்   3. யானை   4. எருது

***(20 × 2 = 40 புள்ளிகள்)***

## பகுதி II

01.அ) கீழே தரப்பட்டுள்ள இடங்களை இலங்கைப்படத்தில் துல்லியமாகக் குறித்துப் பெயரிடுக.

i. அனுராதபும்
ii. பொலநறுவை
iii. மகாதித்த
iv. திருகோணமலைத் துறைமுகம்
v. மல்வத்து ஓயா
vi. மகாவலிகங்கை

***(6 × 1 = 6 புள்ளிகள்)***

Education கல்வி அධ්‍යාපන

02.ஆ) கீழவரும் ஆங்கில எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் குளத்தினது உறுப்புக்களைப் பெயரிடுக.

i. A -
ii. B -
iii. C -
iv. D -
v. E -
vi. F -

***(6 × 1 = 6 புள்ளிகள்)***

03)

(1) எமது நாட்டுக்கே உதித்தான பாரம்பரியத் தொழிநுட்பத்தின் வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
(2) நீரியற் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஆக்கங்கள் மூன்றினைத் தருக.
(3) அனுராதபுர காலப்பகுதியில் அமைக்கப்பட்ட குளங்கள் மூன்றின் பெயர்களைத் தருக.
(4) பாரிய குளங்களை அமைத்தமையால் இலங்கையர்கள் அடைந்த அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக

04)

(1) அனுராதபுரயுகத்தில் குளங்களை அமைத்த மன்னர்கள் இருவரின் பெயர்களைத் தருக.
(2) பருமனின் அடிப்படையில் குளத்தின் மூன்று பிரிவுகளையுந் தருக.
(3) குளத்தின் முக்கிய உறுப்புகள் / பாகங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
(4) குளம் ஒன்றினை அமைக்கும்போது முக்கியமாகக் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

05)

(1) அனைக்கட்டுகளின் இரு பிரிவுகளையும் குறிப்பிடுக.
(2) கீழ்வரும் கால்வாய்களை அமைத்த மன்னரின் பெயர்களைக் குறிப்பிடுக.

i. தல்வத்துக்கால்வாய் -
ii. யோதஎல கால்வாய் -
iii. மின்ப்பே கால்வாய் -

(3) கால்வாய்களை அமைக்கும்போது இலங்கையர்கள் எதிர்கொண்ட சவால்கள் மூன்றினைத் தருக.
(4) புராதன காலப்பகுதியில் பொய்கைகளை அமைக்கும் போது கவனஞ் செலுத்தப்பட்ட முக்கிய விடயங்கள் இரண்டினைத் தருக.

06) (1) நீர்ப்பூங்கா / நந்தவனம் என்றால் என்ன?
(2) கீழ்வரும் நீர்ப்பூங்காக்களை அமைத்த மன்னர்களின் பெயர்களை அதன் அருகே குறிப்பிடுக.

i. சீகிரிய நீர்ப்பூங்கா -
ii. ரண்மசு பூங்கா -
iii. பத்மஸ்வரப் பூங்கா -

(3) இராசரட்டையுகத்தில் சிலைமனைகளை நிர்மாணிப்பதில் பின்பற்றப்பட்ட மூன்று மரபு முறைகளும் யாவை?
(4) அனுராதபுரகாலச்சந்திரவட்டக்கல்லில் நாம் அவதானிக்கக் கூடிய விடயங்கள் இரண்டினைத் தருக.



kalvi.lk